# அருள் நிறை மரியே வாழ்க

அருள் நிறை மரியே வாழ்க ஆண்டவர் உம்முடனே
பெண்களிலே நீர் பேறுபெற்றீர் உம் மகனும் வாழியவே - ( 2 )
பரிசுத்த மரியாளே எங்கள் பரமனின் தாயாரே
பாவிகள் எங்களுக்காய் பரமனை மன்றாடும் - 2
இப்போதும் நீர் மன்றாடும் எப்போதும் நீர் மன்றாடும் - 2
மரணம் வருகையிலே எம்மைத் தாங்குமம்மா
அன்னையே அம்மா மரியே அன்பும் அருளும் நீயே
வாழியவே வாழியவே வானோர் போற்றும் தாயே - ( 2 )

மீட்பரின் பாதையில் சென்றவளே மேலவன் திருவுளம் வாழ்ந்தவளே- ( 2 )
இகமதில் இருப்பவர் எம் துணையே
எங்களின் இனிய நல் இறையன்னையே

( அன்னையே )

பல்லாண்டு காலமாய் எமக்காக
மாறா அன்பினைப் பொழிந்தவளே – 2